# லாப நோக்கோடு செயல்படவில்லையா 'சிப்காட்?'

## பன்னாட்டு நிறுவனங்களுக்காக பதம் பார்க்கப்படும் பசுமைப் போர்வை

– ஆர்.ரங்கராஜ் பாண்டே –

சமீபத்தில் தினமலர் நாளிதழில், 'சிப்காட்' நிறுவனம் செயல்படும் விதம் பற்றி செய்தி வெளியானது. அதற்கு தமிழக அரசு அனுப்பியிருந்த விளக்கத்தில், 'சிப்காட்' நிறுவனம் விவசாய நிலங்களை கையகப்படுத்துவதில்லை எனவும், லாப நோக்கோடு செயல்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த இரண்டிலும் எவ்வளவு தூரம் உண்மை இருக்கிறது என விசாரித்ததில், பல அதிர்ச்சிகரமான உண்மைகள் தெரியவந்தன.

முதலில், நிலங்களை அரசு கையகப்படுத்த வேண்டிய தேவையே என்ன என்ற கேள்வி எழுகிறது. இது குறித்து, சென்னையைச் சேர்ந்த வக்கீல் ஷ்யாம் சுந்தர் கூறுகையில், 'பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தேவையான நிலத்தை, அரசு அடையாளம் காட்டுவதோடு நிறுத்திக் கொள்ளலாம். தொழில் நிறுவனமும், நில உரிமையாளரும் பேசிக் கொள்ளலாம்.

அதை விடுத்து, அரசே அடிமாட்டு விலைக்கு கையகப்படுத்தி, அதை நல்ல விலைக்கு தொழில் நிறுவனங்களிடம் விற்பது, ரியல் எஸ்டேட் தொழில் அன்றி, வேறில்லை' என்கிறார்.

தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் டாடா நிறுவனத்துக்காக தமிழக அரசு நிலம் கையகப்படுத்தத் துவங்கியதற்கு, கடும் எதிர்ப்பு கிளம்பியது.

உடனடியாக அந்த முயற்சியைக் கைவிட்ட அரசு, டாடா நிறுவனத்தையே நேரடியாக நிலம் வாங்கிக் கொள்ளக் கூறி விட்டது. அதே முறையை ஏன் எல்லா நிறுவனங்களுக்கும் கைக்கொள்ளக் கூடாது? எதிர்ப்பு வந்தால் தான் திருந்துவோம் என்பது நல்ல நடைமுறை அல்லவே.

'இப்படி எல்லா இடங்களிலும் எதிர்ப்பு வந்தால், தொழில் வளர்ச்சியே இல்லாமல் போய் விடும்' என்பது அரசின் வாதமாக இருக்கலாம். அதை ஈடுகட்ட, அரசிடம் இருக்கும் லட்சக்கணக்கான ஏக்கர் புறம்போக்கு நிலங்களை மேம்படுத்தி வழங்கலாம்.

அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள் கட்டமைப்பு வசதிகளை அதிகரித்தால், பன்னாட்டு நிறுவனங்கள் கொத்திக் கொண்டு போகும். அதை விடுத்து, கோடிகளைக் கொட்டும் இடங்களில் நிலத்தை வளைத்துப் போடுவது, விவசாயிகளுக்கு செய்யப்படும் துரோகம்' என்கிறார் ஷ்யாம் சுந்தர்.

'தமிழக விவசாயிகளுக்கு குறைந்த விலையைக் கொடுத்து விட்டு, பன்னாட்டு பணக்காரர்கள் கோடிகளைக் குவிக்க உதவுவது எந்த வகை நியாயம்?' என்பது அவர் கேள்வி.

அவர் மேலும் கூறுகையில், 'நந்திகிராம் மற்றும் சிங்கூர் பிரச்னைகளுக்குப் பிறகு, ஆந்திரா, கேரளா மற்றும் பல்வேறு வட மாநிலங்கள், 'தொழில் நிறுவனங்களுக்காக இனி நிலத்தைக் கையகப்படுத்துவதில்லை' என, சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றின.

ஆனால், தமிழகத்தில் மட்டும் அப்படி எந்தத் தீர்மானமும் நிறைவேற்றியதாக நினைவில்லை' என்றார்.

சமீபத்தில் கூட, மிகப் பெரிய தொழில் நகரமாக உருவாகிவரும் ஸ்ரீபெரும்புதூர் தாலுகாவைச் சுற்றி, 3,000 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தும் தீவிர முயற்சியில், 'சிப்காட்' இறங்கியுள்ளது. காஞ்சிபுரம் மாவட்ட கலெக்டர், நாளிதழ்களில் பக்கம் பக்கமாக விளம்பரம் வெளியிட்டிருந்தார். அதில், ஸ்ரீபெரும்புதூரைச் சுற்றியுள்ள வல்லம், வடகால் மற்றும் பூதனூர் உள்ளிட்ட கிராமங்களில் நிலம் எடுக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

> 'தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளை முன்னேற்றுவதே நோக்கம்' என, 'சிப்காட்'டின் இணையதளத்தில் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டுள்ளது. அந்நிறுவனம், சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் எத்தனை திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மதுரைக்கு தெற்கே எத்தனை திட்டங்களை நிறைவேற்றியுள்ளது?

இதே ஸ்ரீபெரும்புதூரைச் சுற்றியுள்ள வெங்காடு, பிள்ளைப்பாக்கம், நாவலூர், ஒரகடம் மற்றும் மாத்தூர் உள்ளிட்ட கிராமங்களில் ஏற்கனவே நிலம் எடுக்கப்பட்டுவிட்டது.

இந்த ஊர்களில் எல்லாம் ஏக்கர் என்ன விலை போகிறது என்பதை, குழந்தை கூட சொல்லும். ஆனால், அவ்வாறு நிலத்தைப் பறிகொடுத்தவர்களிடம் எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது என்பதைத் தமிழக அரசு சொல்லுமா?

கிட்டத்தட்ட, ஒரகடத்தில் இருந்து ஸ்ரீபெரும்புதூர் சாலையில் உள்ள அனைத்து கிராமங்களிலும் நிலம் கையகப்படுத்தப்படுகிறது. பாண்டூர் என்ற ஒரே ஒரு கிராமத்தைத் தவிர.

அந்த கிராமத்தில் மட்டும் ஏன் ஒரு சென்ட் நிலம் கூட எடுக்கப்படவில்லை என்பது மில்லியன் டாலர் கேள்வி. இந்தியாவிலேயே எந்த கிராமத்துக்கும் கிடைக்காத பெருமையாக, பாண்டூர் கிராமத்துக்கு மட்டும் பக்க வழிச் சாலை (பை- பாஸ் ரோடு) கிடைத்துள்ளது கிளைக் கதை.

இது ஒரு புறம் இருக்க, வெங்காடு, பிள்ளைப்பாக்கம் மற்றும் நாவலூர் பகுதிகளில் நிலம் எடுத்த போது, 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பச்சை மரங்கள் வெட்டப்பட்டன. வெங்காடு கிராமத்தில் மட்டும் சர்வே எண் 251, 253, 255 மற்றும் 257ல் அடங்கிய 26 ஏக்கரில், 3,000 பச்சை மரங்கள் வெட்டப்பட்டன. இதற்கு ஈடாக, எத்தனை மரங்கள் புதிதாக நடப்பட்டன என்பதற்கு எந்தப் புள்ளி விவரமும் இல்லை. வெட்டப்படும் ஒவ்வொரு மரத்துக்கும் பத்து புதிய மரங்கள் நடப்பட வேண்டும் என்பது சென்னை ஐகோர்ட் உத்தரவு.

இப்போதும் கூட, நிலத்தைக் கையகப்படுத்தும் போது, அந்த நிலத்தில் என்னென்ன மரங்கள், எத்தனை உள்ளன என்பதே அரசே குறைவாகக் குறிப்பிடுகிறது. அந்தக் கணக்கை எடுத்துப் பார்த்தாலே, தமிழகத்தின் பசுமைப் போர்வைக்கு எவ்வளவு பங்கம் வந்திருக்கிறது என்பது தெரியும்.

இவ்வாறாக, இது வரை, 20 ஆயிரம் ஏக்கருக்கும் மேல் நிலத்தைக் கையகப்படுத்தியுள்ள, 'சிப்காட்' 2005 - 06ம் ஆண்டு முதல், தொடர்ந்து தமிழக அரசுடன் லாபத்தைப் பங்கிட்டு வருகிறது.

கடந்த 11ம் தேதி தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூட, '2009 - 10ம் ஆண்டில் 302 கோடியே ஒன்பது லட்சம் ரூபாயை மொத்த வருமானமாகவும், அதில் 92 கோடியே 10 லட்சம் ரூபாயை நிகர லாபமாகவும் ஈட்டி உள்ளது. அதற்கான தமிழக அரசின் ஆதாய பங்குத் தொகை 14 கோடியே 48 லட்சம் ரூபாய், முதல்வரிடம் வழங்கப்பட்டது' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு ஆண்டில் 302 கோடி ரூபாய் வருமானம் எப்படி வந்தது? அதில் 92 கோடி ரூபாய் லாபம் எப்படி கிடைத்தது? ஒரே ஒரு ஆண்டில் 92 கோடியே 9 லட்சம் ரூபாயை லாபமாகப் பெற்ற பிறகும், 'லாப நோக்கோடு இயங்கவில்லை' என்று சொல்ல முடியுமா? அப்படி லாப நோக்கோடு இயங்கவில்லை எனில், எவர் நிலத்தைக் கையகப்படுத்தியதால் இந்தப் பணம் கிடைத்ததோ, அந்த விவசாயிகளுக்கே இதைத் திருப்பித் தந்திருக்கலாமே!

பொறுங்கள்! இதற்கும் தமிழக அரசிடம் ஏதாவது பதில் இருக்கும்.